# காலாண்டு பொதுத்தேர்வு - 2024 - 2025
## ஒன்பதாம் வகுப்பு

**காலம் : 2:30** **மதிப்பெண் :100**

I **அனைத்து வினாக்களுக்கும் விடையளி :-** 15X1=15
**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1"காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!" ----- இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
(அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை
(ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
(இ) மோனை, எதுகை, இயைபு
(ஈ) மோனை, முரண், அந்தாதி

2. நீர் நிலைகளோடு தொடர்பு இல்லாதது எது?
(அ) அகழி (ஆ) ஆறு (இ) இலஞ்சி (ஈ) புலரி

3.பொருந்தாத இணை எது?
(அ) ஆதிச்சநல்லூர்- அரிக்கமேடு (ஆ) ஏறுகோள் - எருதுகட்டி
(இ) திருவாரூர் - கரிக்கையூர் (ஈ) பட்டிமன்றம்-பட்டிமண்டபம்

4.பின்வரும் தொடர்களைப் படித்து 'நான் யார்' என்று கண்டுபிடிக்க
அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்
எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்
இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்.
(அ) இணையம் (ஆ) தமிழ் (இ) கணினி (ஈ) ஏவுகணை

5.ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
(அ) திசைச்சொற்கள் (ஆ) வடசொற்கள் (இ) உரிச்சொற்கள்
(ஈ) தொகைச்சொற்கள்

6. சொற்றொடர்களை முறைபடுத்துக:
(அ) ஏறு தழுவுதல் என்பதை (ஆ) தமிழ் அகராதி (இ) தழுவிப் பிடித்தல் என்கிறது.
(i) ஆ-அ-இ (ii) ஆ-இ-அ (iii) இ-ஆ-அ (iv)இ-அ-ஆ

7.<u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே- கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
(அ) மறுமை (ஆ) பூவரசு மரம் (இ) வளம் (ஈ) பெரிய

8.தீரா இடும்பை தருவது எது?
(அ) ஆராயாமை, ஐயப்படுதல் (ஆ) குணம், குற்றம் (இ) பெருமை, சிறுமை (ஈ) நாடாமை, பேணாமை

9.தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
(அ) தேசியத் திறனறித் தேர்வு (ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
(இ) தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு
(ஈ) மூன்றும் சரி

10.தமிழ்விடுதூது-------- என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
(அ) தொடர் நிலைச்செய்யுள் (ஆ) புதுக்கவிதை
(இ) சிற்றிலக்கியம் (ஈ) தனிப்பாடல்

11.பொருந்தாத சொல்லைக் கண்டறிக
(அ) கர்நாடகம் (ஆ) கேரளா (இ) இலங்கை (ஈ) ஆந்திரா

12.தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. இது எவ்வகைத் தொடர்
(அ) வினாத் தொடர் (ஆ) கட்டளைத் தொடர் (இ) செய்தித் தொடர்
(ஈ) உணர்ச்சித் தொடர்

13.ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே - இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது
(அ) நுகர்தல் (ஆ) தொடு உணர்வு (இ) கேட்டல் (ஈ) காணல்

14.பொருத்தமான வினையை எடுத்து எழுதுக
கதிர் அலுவலகத்தில் இருந்து விரைவாக --------
அவன் பையன் பள்ளியில் இருந்து இன்னும்------
(அ) வந்தான், வருகிறான் (ஆ) வந்துவிட்டான், வரவில்லை
(இ) வந்தான், வருவான் (ஈ) வருவான், வரமாட்டான்

15."மிசை" - என்பதன் எதிர்ச்சொல் என்ன?
(அ) கீழே (ஆ) மேலே (இ) இசை (ஈ) வசை

Padasalai.Net

## பகுதி - II

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 21 வது வினாவிற்கு கட்டயாமாக விடையளிக்கவும் :-** **4X2=8**

16. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக:-

17.விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்:

(அ) தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்

(ஆ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறு தழுவுதல்

18.பட்டி மண்டபம், பட்டி மன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக:-

19.நிலம்போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

20.கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக:-

21.'மிகுதியான்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக:-

## பகுதி - III

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் :-** **5x2=10**

22. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவுச் செய்க

(அ) கற்றோருக்குச் சென்ற --------------------

(ஆ) சித்திரமும் கைப்பழக்கமும் -------------

23.பிழை நீக்கி எழுதுக;

(அ) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தான்.

(ஆ) மழையே பயிர்க் கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணைப் புரிகின்றன.

24. கலைச் சொற்கள் தருக:

(அ) Download (ஆ) Missile

25. பகுபத உறுப்பிலக்கணம் தருக:

நிறுத்தல்

26.சொற்களை இணைத்து தொடர்களைவிரிவுபடுத்துக

(அ) மழை பெய்தது (ஆ) குழந்தை சிரித்தது

27.மரபு இணைச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக:

(அ) மேடும் பள்ளமும் (ஆ) கண்ணும் கருத்தும்

28.பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்- ,இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக:-

## பகுதி - IV **2X3=6**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி :-**

**29.**திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக:-

**30.**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:-

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும் போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள் ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறி விடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர் பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறு தழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக் கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம், ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செயயப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேயம் மாடுகளின் உருவம் பொறித்த கி.மு முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

(அ) மிடுக்குத் தோற்றதிற்கும் ஏறு தழுவுதலுக்கும் பெயர்

Padasalai.Net

பெற்றவை எவை?

(ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?

(இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் சென்ற காளை இனம் எது?

31 .காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

## பகுதி - V 2X3=6

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: வினா எண் 34 -க்கு மட்டும் கட்டாயமாக விடையளிக்கவும் :-**

**32.பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக:-**

**33.அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக:-**

**34.அடி பிறழாமால் எழுதுக:**

**(அ) " காடெல்லாம்" எனத் தொடங்கும் பெரியபுராண பாடலை எழுதுக:-**

**(அல்லது)**

**(ஆ) 'அறிவியல் என்னும்' எனத் தொடங்கி பொருத்துங்கள் என முடியும் ஓ, என் சமகாலத் தோழர்களே என்ற பாடலை எழுதுக:-**

## பகுதி - VI 2X3=6

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி:-**

35. தன்வினை, பிறவினை- எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக:-

36.வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக:-

37.திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று

- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க:-

## பகுதி - VII

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :- 5X5=25**

38.(அ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக:-

(அல்லது)

(ஆ) மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கை கோளின் பங்கு யாது?

39.நயம் பாரட்டுக:-

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடுந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்;
ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன்

- கவிமணி

(அல்லது)

சொற்களை இணைத்துத் தொடர்பான விரிவுபடுத்துக:-

(அ) மழை பெய்தது
(ஆ) வானவில்லைப் பார்த்தேன்
(இ) குழந்தைச் சிரித்தது
(ஈ) எறும்புகள் போகின்றன
(உ) படம்வரைந்தேன்

40.(அ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் " கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக:-

Padasalai.Net

(அல்லது)

(ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக்' கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக:-

41. (அ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:-



(அல்லது)

(ஆ) மொழிபெயர்க்கவும்:

(அ) **You have to dream before Your dreams can come true – A.P.J. Abdul Kalam**

(ஆ) **The art of People is a true mirror to their minds – Jawaharlal Nehru**

(இ) **The biggest problem is the lack of love and Charity – Mother Terasa**

(ஈ) **Every Flower is soul blossoming is nature – Gerard De Nerval**

(உ) **Sunset is still my favourite colour, and Rainbow is second – Mattie Stepanek**

42. (அ) அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தபட்டது?

**பகுதி - VII** **3X8=24**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:-**

43.(அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்கு தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக:-

(அல்லது)

(ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டு சிறப்பினைத் தொகுத்து எழுதுக;-

44.(அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை எழுதுக:-

(அல்லது)

(ஆ) ஏறுதழுவதல் தமிழரின் அறச் செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க:-

45.(அ) "தண்ணீர்" கதையை கருப்பொருள் மாறாமல் சுருக்கி தருக:-

(அல்லது)

(ஆ) இந்திய விண்வெளி துறைப் பற்றிய செய்திகளை விவரிக்க:-

Padasalai.Net

Padasalai.Net

Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கல்வித்துறை – பெரம்பலூர் மாவட்டம் - ஒன்பதாம் வகுப்பு | | | |
| தமிழ் – காலாண்டுப் பொதுத் தேர்வு – 2024 | | | |
| உத்தேச விடைக்குறிப்புகள் | | | |
| பகுதி - I | அனைத்து வினாக்களுக்கும் குறியீட்டுடன் விடையளிக்கவும். | | 15 x 1 = 15 |
| வினா எண் | விடைகள் | | மதிப்பெண் |
| 1 | இ | மேனை, எதுகை, இயைபு | 1 |
| 2 | ஈ | புலரி | 1 |
| 3 | இ | திருவாரூர் - கரிக்கையூர் | 1 |
| 4 | ஆ | தமிழ் | 1 |
| 5 | அ | திசைச்சொற்கள் | 1 |
| 6 | அ | ஆ – அ – இ | 1 |
| 7 | இ | வளம் | 1 |
| 8 | அ | ஆராயாமை, ஐயப்படுதல் | 1 |
| 9 | ஆ | ஊரகத் திறனறித் தேர்வு | 1 |
| 10 | இ | சிற்றிலக்கியம் | 1 |
| 11 | இ | இலங்கை | 1 |
| 12 | இ | செய்தித் தொடர் | 1 |
| 13 | ஆ | தொடு உணர்வு | 1 |
| 14 | ஆ | வந்துவிட்டான், வரவில்லை | 1 |
| 15 | அ | கீழே | 1 |

| | | |
|---|---|---|
| பகுதி - II | | |
| பகுதி - II | எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.<br>21 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும் | 4 x 2 = 8 |
| 16 | வீணையோடு வந்தாள் - வேற்றுமைத்தொடர்<br>கிளியே பேசு - விளித்தொடர் | 2 |
| 17 | விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க. ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | |
| அ | தண்ணீரை எப்படி பயன்படுத்துவாய் ? | 1 |
| ஆ | தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு எது ? | 1 |
| 18 | ❖ பட்டிமண்டபம் என்பது தான் இலக்கிய வழக்கு. ஆனால், இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள்.<br>❖ பேச்சுவழக்கையும் ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே இரண்டும் ஒன்றுதான். | 2 |
| 19 | நம்மை இகழ்பவரிடம் நாம் நிலம்போலப் பொறுமை காக்க வேண்டும். | 2 |
| 20 | ❖ பொறுமையுடனும் அடக்கத்துடனும் இருந்த கூட்டுப்புழு தான் பட்டாம்பூச்சியாக மாறுகிறது.<br>❖ அதுபோல பொறுமை, அடக்கம் என்ற கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தால் வாழ்வில் மேன்மை அடையலாம் | 2 |

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 21 | மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்<br>தகுதியான் வென்று விடல் - திருவள்ளுவர் | 2 |
| பகுதி- III | எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. | 5x2=10 |
| 22 | தொடரைப் பழமொழி கொண்டு நிறைவுச் செய்க. | |
| அ | கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. | 1 |
| ஆ | சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம். | 1 |
| 23 | பிழை நீக்கி எழுதுக. | |
| அ | மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தான். | 1 |
| ஆ | மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றது. | 1 |
| 24 | கலைச்சொற்கள் தருக. | |
| அ | Download - பதிவிறக்கம் | 1 |
| | Missile - ஏவுகணை | 1 |
| 25 | நிறுத்தல் – நிறு + த் + தல்<br>நிறு – பகுதி<br>த் – இறந்த கால இடைநிலை<br>தல் – தொழிற்பெயர் விகுதி | 2 |
| 26 | சொற்களை இணைத்து தொடர்களை விரிவு படுத்துக.<br>( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | |
| அ | மழை பெய்தது.<br>❖ நேற்று மழை பெய்தது.<br>❖ நேற்று காலையில் மழை பெய்தது.<br>❖ நேற்று காலையில் ஆலங்கட்டி மழை பெய்தது.<br>❖ நேற்று காலையில் அளவுக்கு அதிகமாக ஆலங்கட்டி மழை பெய்தது. | 1 |
| ஆ | குழந்தை சிரித்தது.<br>❖ இன்று குழந்தை சிரித்தது.<br>❖ இன்று காலையில் குழந்தை சிரித்தது.<br>❖ இன்று காலையில் தாயைப் பார்த்துக் குழந்தை சிரித்தது.<br>❖ இன்று காலையில் தாயைப் பார்த்துத் தொட்டிலில் கிடந்தக் குழந்தை சிரித்தது. | 1 |
| 27 | மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. | |
| அ | சாலைகள் மேடும் பள்ளமுமாக இருக்கின்றன. | 1 |
| ஆ | எதைச் செய்தாலும் கண்ணும் கருத்துமாகச் செய்ய வேண்டும் | 1 |
| 28 | இடம் : மணிமேகலை, விழாவறை காதையில் இடம் பெற்றுள்ளது.<br>விளக்கம் : இந்திர விழாவைக் கொண்டாடுவதற்காகப் புகார் நகரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை எடுத்துவிட்டுப் புதிய மணலைப் பரப்புங்கள் என்று அறிவிக்கப்படுகிறது. | |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| பகுதி- IV | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. | 2 x 3 = 6 |
| 29 | திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூன்றாகப் பிரிப்பர். அவற்றுள் சிறந்த மொழிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு, குடகு, கூவி (குவி). கோண்டா போன்றவை.<br>தமிழ் : தொன்மையும் இலக்கிய இலக்கண வளமும் உடைய மொழி; பிறமொழிக் கலப்புக் குறைந்த மொழி; திராவிட மொழிகளின் தாய்மொழி.<br>தெலுங்கு : தேன் போன்ற இனிய மொழி; எழுத்துமுறை தேவநாகரியை ஒட்டி அமைந்துள்ளது.<br>மலையாளம் : சேரநாட்டின் மொழி; தமிழோடு ஒத்த இனமொழி என்பர். இதன் இலக்கியம் இராமசரிதம். | 3 |
| 30 | உரைப்பத்தியைப் படித்து, வினாக்களுக்கு விடை தருக. | |
| அ | காங்கேயம் மாடுகள். | 1 |
| ஆ | காங்கேயம் மாடுகள். | 1 |
| இ | காங்கேயம் மாடுகள். | 1 |
| 31 | ❖ முன்னைப் பழமைக்குப் பழைமையும், பின்னைப் புதுமைக்குப் புதுமையும் கொண்ட தமிழ் மொழி.<br>❖ மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது.<br>❖ தனித்தன்மை மாறாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ் திகழ்கிறது.<br>❖ காலப்புதுமையைப் பெறத்தக்க வல்லமை கொண்டது. கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்றதாய் அமைந்துள்ளது. | 3 |
| பகுதி- V | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.<br>34 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும் | 2 x 3 = 6 |
| 32 | ❖ நடுவண் அரசும், மாநில அரசும் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு ஆண்டுதோறும் பல போட்டித் தேர்வுகளை நடத்துகின்றன.<br>❖ பத்தாம் மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குத் தேசியத் திறனறித் தேர்வு மற்றும் கல்வி உதவித்தொகைத் தேர்வு ஆகியவை நடத்தப்படுகின்றன.<br>❖ கிராமப்புறப் பள்ளிகளில் படிக்கும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு ஊரகத் திறனறித் தேர்வு நடத்தப்படுகிறது. இத்தகைய தேர்வுகளுக்குப் பள்ளிகளிலேயே இணையத்தின் வழி விண்ணப்பிக்கலாம்.<br>❖ பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு அரசின் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் செய்ய வேண்டிய பதிவு ஆண்டுதோறும் அவர்கள் படித்த பள்ளிகளிலேயே இணையத்தின் வழியாகச் செய்யப்படுகிறது.<br>❖ அரசின் விலையில்லா மிதிவண்டி, மடிக்கணினி ஆகியவற்றைப் பெற்ற மாணவர்களின் விவரங்கள் இணையத்தின் மூலம் பதிவு செய்யப்படுகிறது. | 3 |

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 33 | ❖ உலகில் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு அடிப்படைத் தேவையாக உள்ள தண்ணீரைப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.<br>❖ நம் முன்னோர்கள் கண்டுபிடித்த மரபார்ந்த அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.<br>❖ கிணறு, குளம், ஏரி, குட்டை, கால்வாய், ஆறுகளைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்குதல் வேண்டும்.<br>❖ நீர்நிலைகளை மாசுபடாமல் தூய்மை செய்தும், நீர் வரும் வழிகளில் ஏற்படும் தடைகளைக் களைந்தும் பாதுகாத்தும் மக்களிடம் நீர் இன்றியமையாமை குறித்து வழிகாட்ட வேண்டும்.<br>❖ மழைநீரைச் சேமித்தல் வேண்டும்.<br>❖ இவ்வாறு செய்தால் அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். | 3 |
| 34 | பெரிய புராணம்<br>காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு<br>மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை<br>கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன<br>நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம் - சேக்கிழார்<br>(அல்லது)<br>ஓ, என் சமகாலத் தோழர்களே!<br>அறிவியல் என்னும் வாகனம் மீதில்<br>ஆளும் தமிழை நிறுத்துங்கள்<br>கரிகா லன்தன் பெருமை எல்லாம்<br>கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்<br>ஏவும் திசையில் அம்பைப் போல<br>இருந்த இனத்தை மாற்றுங்கள்<br>ஏவு கணையிலும் தமிழை எழுதி<br>எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள். - வைரமுத்து | 3 |
| பகுதி- VI | எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. | 2 x 3 = 6 |
| 35 | தன்வினை - வினையின் பயன் எழுவாயைச் சேரும்.<br>❖ திருடன் திருந்தினான்<br>பிறவினை - வினையின் பயன் பிறரையோ, பிறவற்றையோ சென்றடைதல்.<br>❖ காவலர் திருடனைத் திருத்தினார் | 3 |
| 36 | ❖ நாம் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகும், மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.<br>எ.கா. கத்தி கொண்டு வந்தான் - ஒருவன் கத்தியைக் கொண்டு வந்தான்.<br>கத்திக் கொண்டு வந்தான் - ஒருவன் சத்தமாகப் பேசிக் கொண்டே வந்தான். | 3 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 37 | சீர் | அசை | | | வாய்பாடு | 3 |
| | திற / னல் / ல | நிரை | நேர் | நேர் | புளிமாங்காய் | |
| | தற் / பிறர் | நேர் | நிரை | - | கூவிளம் | |
| | செய் / யினும் | நேர் | நிரை | - | கூவிளம் | |
| | நோ / நொந் / து | நேர் | நேர் | நேர் | தேமாங்காய் | |
| | அற / னல் / ல | நிரை | நேர் | நேர் | புளிமாங்காய் | |
| | செய் / யா / மை | நேர் | நேர் | நேர் | தேமாங்காய் | |
| | நன் / று | நேர் பு | | | காசு | |
| | இக்குறட்பா காசு என்னும் வாய்பாட்டைக் கொண்டு முடிந்துள்ளது. | | | | | |
| பகுதி IV | அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. | | | | | 5x5=25 |
| 38 | எங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகள்:<br>❖ கோவிலையும், தெருக்களையும் தூய்மைப்படுத்துவார்கள்<br>❖ தென்னையோலையால் தெருவெங்கும் பந்தல் கட்டுவார்கள்<br>❖ வாழை மரங்களைக் கட்டி வைப்பார்கள்<br>❖ நாடகம், இசைக் கச்சேரி. கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் போன்றவற்றை நடத்திட ஏற்பாடு செய்வார்கள்.<br>இந்திர விழா நிகழ்வுகள்:<br>❖ தெருக்களிலும், மன்றங்களிலும் பூரணகும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மற்றும் மங்கலப் பொருட்களை முறையாக அழகுபடுத்திவைப்பார்கள்.<br>❖ பாக்கு மரம், வாழை மரம். வஞ்சிக் கொடி. பூங்கொடி, கரும்பு போன்றவற்றை நட்டுவைத்தனர்.<br>❖ வீடுகளின் முன் தெருத்திண்ணையில் இருக்கும் தங்கத் தூண்களில் முத்து மாலைகளைத் தொங்கவிட்டனர்.<br>❖ விழாக்கள் நிறைந்த மூதூரின் தெருக்களிலும், மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்பினார்கள்.<br>❖ சொற்பொழிவு, பட்டிமண்டபம் நடத்தினார்கள் | | | | | 5 |
| | ( அல்லது) | | | | | |
| | ❖ செயற்கைக் கோள்களினால் ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தின் மூலம் உற்பத்தியைப் பெருக்க வழிவகைகளை அரசுக்குத் தெரிவிக்க முடிகிறது.<br>❖ அரசானது பற்பல விவசாய முன்னேற்றத் திட்டங்களை வகுக்க முடிகிறது.<br>❖ நிலத்தில் எந்த இடத்தில் நீரின் அளவு இருக்கும் என்பதைச் செயற்கைக்கோள் மூலம் அறிவதால் அதற்கேற்பப் பயிர் செய்ய முடிகிறது.<br>❖ விவசாயத்தில் தன்னிறைவு ஏற்படும் போது மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.<br>❖ கடல் பகுதியில் எந்த எந்த இடங்களில் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் என்று மீனவர்களுக்கும் சொல்ல முடிகிறது. | | | | | 5 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 39 | **திரண்டக் கருத்து:**<br>"கற்கள் நிறைந்த மலையிலிருந்து குதித்துப் பெரிய காட்டையும் அதிலுள்ள செடிகளையும் கடந்து எங்கும் விரிந்து கிடக்கும் சமவெளிகளிலும் தவழ்ந்து வந்தேன். மேடு பள்ளங்களை நிரப்பியும் ஏரி குளங்களை நிறைத்தும் பூமிக்கடியில் சென்று ஊற்றாகவும், மணல் நிறைந்த ஓடைகளில் பொங்கி ஆர்ப்பரித்தும் ஓடிவந்தேன்" என ஆற்றுநீர் கூறுவதாக இப்பாடல் ய அமைந்துள்ளது.<br>**மையக்கருத்து:**<br>ஆறானது கற்களையும், மலையையும் தாண்டிக் காடுகள் வழியாகக் கழனியைச் செழிப்பாக்கி ஏரி, குளங்களை நிரப்பிச் செல்லும் பாங்கை உணர்த்துகிறது இப்பாடல்..<br>**மோனைத் தொடை:**<br>அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை ஆகும்.<br>**சீர் மோனை:**<br>ஊறாத ஊற்றிலும்<br>**அடி மோனை:**<br>ஏறாத ஏரி<br>**எதுகைத் தொடை:**<br>அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து அளவொத்து இருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.<br>கல்லும் எல்லை<br>ஊறாத ஏறாத<br>**இயைபுத் தொடை:**<br>இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றுபோல் வருவது இயைபுத்தொடையாகும்.<br>வந்தேன் வந்தேன்<br>வந்தேன் வந்தேன்<br>**அணி நயம் :**<br>உள்ளதை உள்ளவாறு கூறுவதால் இப்பாடலில் 'இயல்பு நவிற்சி அணி' இடம் பெற்றுள்ளது.<br>**சுவை நயம்:**<br>ஆறானது தனது பெருமைகளைக் கூறுவதால் இப்பாடலில் 'பெருமிதச் சுவை' பயின்று வந்துள்ளது. | 5 |
| | (அல்லது) | |
| | **மழை பெய்தது.**<br>❖ நேற்று மழை பெய்தது.<br>❖ நேற்று காலையில் மழை பெய்தது.<br>❖ நேற்று காலையில் ஆலங்கட்டி மழை பெய்தது.<br>❖ நேற்று அளவுக்கு அதிகமாக ஆலங்கட்டி மழை பெய்தது. | 5 |

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | **வானவில்லைப் பார்த்தேன்.**<br>❖ நான் வானவில்லைப் பார்த்தேன்.<br>❖ நான் நேற்று வானவில்லைப் பார்த்தேன்.<br>❖ நான் நேற்று காலையில் வானவில்லைப் பார்த்தேன்.<br>❖ நான் நேற்று காலையில் அழகான வானவில்லைப் பார்த்தேன்.<br>**குழந்தை சிரித்தது.**<br>❖ இன்று குழந்தை சிரித்தது<br>❖ இன்று காலையில் குழந்தை சிரித்தது.<br>❖ இன்று காலையில் தாயைப் பார்த்துக் குழந்தை சிரித்தது.<br>❖ இன்று காலையில் தாயைப் பார்த்துத் தொட்டிலில் கிடந்தக் குழந்தை சிரித்தது.<br>**எறும்புகள் போகின்றன.**<br>❖ வரிசையாக எறும்புகள் போகின்றன.<br>❖ இரைதேடி வரிசையாக எறும்புகள் போகின்றன.<br>❖ வீட்டின் தரையில் இரைதேடி வரிசையாக எறும்புகள் போகின்றன.<br>**படம் வரைந்தான்.**<br>❖ பாரதி படம் வரைந்தான்.<br>❖ நேற்று பாரதி படம் வரைந்தான்.<br>❖ நேற்றுக் காலையில் பாரதி படம் வரைந்தான்.<br>❖ நேற்றுக் காலையில் பாரதி அழகிய படம் வரைந்தான். | |
| 40 | தோழிக்குக் கடிதம்<br>எறையூர்,<br>20-09-2024.<br>அன்புள்ள தோழி,<br>வணக்கம். நலம் நலமறிய ஆவல். என்னுடைய பிறந்த நாள் பரிசாக நீ அனுப்பிய எழுத்தாளர் இராமகிருஷ்ணன் எழுதிய "கால் முளைத்த கதைகள்" என்ற நூல் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி.<br>முப்பது பழங்குடியினர் சொன்ன கதைகளிலிருந்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உலகம் தோன்றியது எப்படி? என்ற வினாவிற்கு இன்றுவரை தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. உலகம் தோன்றியதற்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன.<br>இந்நூலில் நாய் ஏன் பூனையைத் துரத்துகிறது? கொசு ஏன் கடிக்கிறது? வண்ணத்துப் பூச்சிகள் ஏன் பூக்களைச் சுற்றுகிறது? போன்ற தலைப்புகளில் கதைகள் உள்ளன. குழந்தைகள் மிகவும் விரும்பிப் படிப்பதற்கு ஏற்ற இனிய எளிய சொற்களால் சிறுசிறு கதைகள் அமைந்துள்ளன.<br>உன் பிறந்த நாளுக்கு இது போன்றதொரு நூலை உனக்கு நானும் அனுப்புவேன். மிக்க மகிழ்ச்சி.<br>இப்படிக்கு,<br>உன் அன்புத் தோழி.<br>த.பார்கவி. | 5 |

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | |
|---|---|---|
| | உறைமேல் முகவரி<br>செல்வி.திவ்யா ச<br>16, தெற்கு வீதி, கிளியூர் அஞ்சல்,<br>குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம். 621718. | |
| | அல்லது | |
| | வரவேற்பு மடல்<br>இடம் : அரசு மேல்நிலைப்பள்ளி, அனுக்கூர், பெரம்பலூர் மாவட்டம்.<br>நாள் : 20-09-2024, வெள்ளிக்கிழமை<br>"சுத்தம் சோறு போடும்" "கந்தையானாலும் கசக்கிக் கட்டு"<br>"கூழானாலும் குளித்துக் குடி"<br>என்னும் பழமொழிக்கு ஏற்ப எங்கள் பள்ளி சிறப்பாக அமைந்துள்ளது. தூய்மையே எங்களின் தாரக மந்திரம். நெகிழிப் பயன்பாடு எங்கள் பள்ளியில் தடை செய்யப்பட்டுள்ளது. மட்கும் குப்பை, மட்காக் குப்பைகளுக்கு என தனித் தனி தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன கழிவுகளுக்கும் தனித் தொட்டிகள் உள்ளன. இயற்கை உரம் தயாரித்து எங்கள் பள்ளியில் உள்ள தோட்டங்களைப் பராமரிக்கிறோம்.<br>மாவட்டத்தில் சிறந்த பள்ளியாக எம் பள்ளியைத் தேர்ந்தெடுத்து விருது பெற்றுள்ள இப்பெரு விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்கும் வணக்கத்திற்கும் போற்றுதலுக்குரிய மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களே!<br>நேரிய பார்வையும், நிமிர்ந்த நன்னடையும் கொண்டவரே! கடமை உணர்வுடன், உழைப்பைத் தன் உடைமை ஆக்கியவரே! மாவட்டம் கல்வியில் சிறந்தோங்கிட இராப்பகலாய் உழைத்தவரே! குப்பைகளைப் பக்குவமாய் பிரித்துப் பயன்படுத்த நல்வழி காட்டிய அன்னப் பறவையே!!<br>ஏழை மாணவர், மெல்லக் கற்கும் மாணவர் வாழ்விலும் ஒளி ஏற்றிட, சிகரம் தொட்டிட சீரிய வழி சமைத்தவரே! எம் மாவட்டக் கல்வி அலுவலரே! உம்மை எங்கள் பள்ளியின் சார்பில் வருக! வருக! என உளம் மகிழ வரவேற்கிறோம்.<br>நன்றி.<br>இவண்,<br>இரா மணிமாறன்.<br>(மாணவர் செயலர் ) | |
| 41 | விடாமுயற்சி<br>மூவறிவுடைய எறும்பே<br>ஆறு அறிவுடையவனுக்கு<br>அறிவு புகட்டுகிறாய்<br>உன் எடையைக் காட்டிலும்<br>எட்டு மடங்கு தூக்கிடும்<br>எல்லையற்ற வீரன் நீ ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | 5 |
| | (அல்லது) | |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| அ | உங்கள் கனவு நனவாகும் வரை கனவு கண்டு கொண்டே இருங்கள்<br>– ஏ.பி.ஜே அப்துல் கலாம் | 5 |
| ஆ | மக்களின் தனித்திறன் என்பது அவர்கள் மனதைக் காட்டும் உண்மையான கண்ணாடியாகும் – ஜவஹர்லால் நேரு | |
| இ | அன்பும் கருணையும் போதுமான அளவு இல்லாததே மிகப்பெரிய பிரச்சனையாகும்.<br>- அன்னை தெரசா | |
| ஈ | ஒவ்வொரு மலரும் இயற்கையின் ஆன்ம மலர்ச்சியே! - ஜெரார்டு டி.நெர்வல் | |
| உ | அந்தி வானச் சிவப்பே எனக்குப் பிடித்த வண்ணம், வானவில்லின் வண்ணக்கலவை இரண்டாவதே | |
| 42 | ஓரறிவு - தொடு உணர்வு - புல், மரம்<br>ஈரறிவு - தொடு உணர்வு, சுவைத்தல் - சிப்பி, நத்தை<br>மூவறிவு - தொடு உணர்வு, சுவைத்தல், நுகர்தல் - கரையான், எறும்பு<br>நான்கறிவு - தொடு உணர்வு, சுவைத்தல், நுகர்தல், காணல் - நண்டு, தும்பி<br>ஐந்தறிவு - தொடு உணர்வு, சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல் - பறவை,விலங்கு<br>ஆறறிவு தொடு உணர்வு, சுவைத்தல், நுகர்தல், காணல், கேட்டல், பகுத்தறிதல் - மனிதன் | |
| | அல்லது | |
| | ❖ தூம்பு என்பது தண்ணீர் போகும் வழி அடைப்பாகும்.<br>❖ மழைக்காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று, கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார்.<br>❖ அடியில் இரண்டு துளைகள் காணப்படும். மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும். கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும்.<br>❖ இதனால் தூர் வார வேண்டிய அவசியம் இல்லை. | |
| பகுதி IV | அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. | 3x8=24 |
| 43 அ | ❖ இந்திய மொழிக் குடும்பங்களுள் திராவிட மொழிக் குடும்பமும் ஒன்று.<br>❖ திராவிட மொழிக் குடும்பத்தில் 28 மொழிகள் உள்ளன.<br>❖ திராவிட மொழிகளுக்குள் மூத்த மொழியாய் விளங்குவது தமிழ்.<br>❖ தமிழ் என்ற சொல்லிலிருந்து தான் 'திராவிடா' என்னும் சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.<br>❖ ஹீராஸ் பாதிரியார் இம்மாற்றத்தைத் தமிழ் தமிழா தமிலா டிரமிலா ட்ரமிலா த்ராவிடா திராவிடா என்று விளக்குகிறார்.<br>❖ திராவிட மொழிகள் அனைத்திற்கும் மூலமொழியாகத் திகழ்வது தமிழ்மொழி.<br>❖ ஏனைய திராவிட மொழிகள் தமிழிலிருந்து தோன்றி வளர்ந்தவையே.<br>❖ எண்பது விழுக்காடு (80%) திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி தமிழே.<br>❖ தமிழ்மொழியின் வேர்ச்சொற்களைச் சார்ந்தே பிற திராவிட மொழிகளின் வேர்ச் | 8 |

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | சொற்கள் தோன்றியுள்ளன.<br>❖ எ.கா. கண் கண்ணு கன்னு கண்ணு ஃகன்<br>மூன்று - மூணு - மூடு - மூரு – மூஜி<br>❖ ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி தமிழ்ச் சொற்கள் பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன.<br>❖ திராவிட மொழிகளின் எண்ணுப் பெயர்கள் ஒன்று போலவே உள்ளன.<br>❖ தமிழ் மொழியிலேயே தொன்மையான இலக்கண நூல்கள் உள்ளன.<br>❖ தொன்மையான கல்வெட்டுகள் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.<br>❖ திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ் பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது<br>❖ மூல திராவிட மொழியின் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்ட மொழி தமிழ்மொழி.<br>❖ எனவே திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதே மொழியியல் ஆய்வாளர்களின் கருத்து | |
| | (**அல்லது**) | |
| ஆ | ❖ காவிரி நீர் திருநாட்டுக்கு வளத்தைத் தரும் பொருட்டு கால்வாய்களில் பரந்து எங்கும் ஓடுகிறது.<br>❖ வயலில் களை எடுக்கும் உழத்தியரின் கால்களில் சங்குகள் இடறுவதால் தடுமாறி வரப்பினை அடைகின்றனர்.<br>❖ காடுகளில் கரும்புகளும் சோலைகளில் அரும்புகளும் நீர் நிலைகளில் அன்னங்களும் வயல்களில் சங்குகளும் நிறைந்திருக்கின்றன.<br>❖ குளங்கள் கடல்போல் காட்சியளிக்கின்றன.<br>❖ நீர் நிலைகளில் எருமைகள் வீழ்வதால் வாளை மீன்கள் துள்ளி எழுந்து பாயும் காட்சி வானவில் தோன்றி மறைவதுபோல் உள்ளது.<br>❖ திரு நாட்டில் நெற்கட்டுகளும், மீன்களும் முத்துக்களும் மலர்களும் மலைபோல் குவிக்கப்பட்டுள்ளன.<br>❖ நெற்கட்டுகளில் எருமைகள் வலமாகச் சுற்றி வருவது கருமேகங்கள் இமயமலையைச் சுற்றி வருவதுபோல் காட்சியளிக்கிறது.<br>❖ பலவகை மரங்கள் திருநாடெங்கும் செழித்து வளர்ந்துள்ளன. | 8 |
| 44அ | தமிழ் இலக்கிய மன்ற விழா<br>இடம் : அரசு உயர்நிலைப் பள்ளி, இலாடபுரம், பெரம்பலூர் மாவட்டம்.<br>நாள் : 20-09-2024<br>பெரம்பலூர் மாவட்டம். இலாடபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றக் கூட்டம் பிற்பகல் 3.00 மணியளவில் தொடங்கி நடைபெற்றது.<br>இந்நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் மா.அருள் தலைமை தாங்கினார்.<br>மாவட்ட அளவில் தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற 10.ஆம் வகுப்பு மாணவி க. நிலவு வரவேற்புரை நிகழ்த்தினார். இலக்கியங்களில் எவ்வாறு | 8 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | இன்பச்சுவை அமைந்து இருக்கிறது என்பது பற்றிப் பேசினார்.<br>தலைமை ஆசிரியர் தலைமை உரையில் இலக்கியத்தில் பாடுபொருள் எவ்வாறெல்லாம் காலத்திற்கேற்றாற் போல் மாறி வந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டிப் பேசினார்.<br>சிறப்பு விருந்தினர் திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள், ஒன்பான் சுவைகளை சிறப்புச் சொற்பொழிவாற்றி நகைச்சுவை உணர்வோடு "இலக்கியத்தில் இன்பச்சுவை" எனும் தலைப்பில் இலக்கிய விருந்து படைத்தார்.<br>நிறைவாக இலக்கியமன்றச் செயலர் 9.ஆம் வகுப்பு மாணவி அன்புச் செல்வி நன்றியுரை ஆற்றினார். | |
| | அல்லது | |
| 44ஆ | ❖ தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில் காளையைக் கொன்று அடக்குபவனே வீரன். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.<br>❖ காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை சில நாட்டு விளையாட்டுக்களில் கொல்லப்படுவதும் உண்டு.<br>❖ அது வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.<br>❖ தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது.<br>❖ நிகழ்வின் தொடக்கத்திலும்முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர்.<br>❖ எவராலும் அடக்கமுடியாத காளைகள்வெற்றிபெற்றதாகக் கருதப்படும்.<br>❖ அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையைஅரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர். | 8 |
| 45அ | ❖ இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியான மாவட்டம்.<br>❖ புயல் வந்தால்தான் அங்கு மழை பெய்யும்.<br>❖ மழை பெய்த மூன்றாம் நாளே வறண்ட பூமியாகக் கிடக்கும், அந்த மக்கள் நீருக்காகப் படும்பாட்டை இக்கதை உணர்த்துகிறது.<br>❖ ஒரு காலத்தில் உலகம்மாள் கோயில் கிணறு மட்டும் தான் நல்ல தண்ணீர்க் கிணறாக இருந்தது. இப்போது கிணறும் முள் முளைத்து வறண்டு விட்டது.<br>❖ குடிக்கத் தண்ணீர் வேண்டிப் பெண்கள் காலிக்குடங்களுடன் மூன்று மைல் நடந்து சென்றாலும் மதியத்திற்கு மேல்தான் ஊற ஊற இறைத்து சாயும் பொழுதில் வீடு திரும்புவர்.<br>❖ உலகம் பூராவும் தண்ணீர் இல்லை என்றாலும் இரயிலில் மட்டும் எப்படித் தண்ணீர் கிடைக்கிறது.<br>❖ எனவே மூன்று மணிக்கு வரும் இரயிலிலிருந்து தண்ணீர் பிடிப்போம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.<br>❖ இரயிலில் தண்ணீர் எடுக்க வந்த பெண்களின் கூச்சலும் நெருக்கடியும் பயணிகளுக்குத் தொந்தரவாக இருந்தது.<br>❖ ஸ்டேசன் மாஸ்டர் சிப்பந்திகளை விட்டு விரட்டினார். | 8 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ❖ பாய்ண்ட் மேன் மூலம் இரயில் வரும்போது வந்து சத்தம் போடாமல் தண்ணீர் பிடித்துச் செல்ல அனுமதி கிடைத்தது.<br>❖ புகைவண்டி வரும் சத்தம் கேட்டதும் இந்திரா குடத்தைத் தூக்கிக் கொண்டு வேகமாக ஓடினாள்,<br>❖ இரயிலுக்காகக் காத்திருக்கும் நேரத்தில் இந்திரா கனவு கண்டாள்.<br>❖ பிலாப்பட்டி மாதிரி தண்ணீர் உள்ள ஊர்க்காரனுக்குத்தான் கழுத்தை நீட்ட வேண்டும்.<br>❖ இரயில் காட்டு யானை பிளிறுவதுபோல் நிலையத்திற்கு வந்தது.<br>❖ இந்திரா முகம் கழுவும் பேசினிலிருந்து தண்ணீரைப் பிடித்து குடத்தில் ஊற்றினாள்.<br>❖ இஞ்சினிலிருந்து ஊதல் ஒலி வந்தது.<br>❖ குடம் நிறையாததால் உள்ளங்கையை மேலும் அழுத்தினாள்.<br>❖ இரயிலின் வேகம் அதிகரித்தது.<br>❖ குடத்தைப் பாதையில் வைத்துவிட்டுக் குதிக்கப் பார்த்தாள்.<br>❖ வட நாட்டுப் பெண் இவளை இழுத்து வண்டிக்குள்ளே தள்ளிவிட்டு விட்டு கோபமாகக் கத்தினாள்.<br>❖ இரயில் சென்றும் வீடு திரும்பாத இந்திராவை பெற்றோரும் உற்றாரும் உறவினரும் பல இடங்களிலும் தேடினர் வெறுமையாய் வீடு திரும்பினர்.<br>❖ நோயுற்ற இந்திராவின் தாய் இரயில் நிலையத்திற்கு ஓடினாள்.<br>❖ ஊர் மக்களும் ஓடினார்கள்.<br>❖ அந்தா இந்திரா வருது என்றாள்.<br>❖ இடுப்பில் தண்ணீர் குடத்துடன் இந்திரா வந்தாள்.<br>❖ ஐயா, கேட்டார் பய மகளே! இதையும் சுமந்து கொண்டா இவ்வளவு மைல் வரணும்.<br>❖ இந்திரா சொன்னாள், "நாளை வரை குடிக்க எங்கே போறது?". | |
| 45 | ❖ இந்திய விண்வெளித்துறை விண்ணில் அனுப்பிய செயற்கைக் கோள்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.<br>❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முக்கிய நோக்கம் குறைந்த செலவில் மக்களுக்குத் தரமான சேவைகளைக் கொடுப்பதேயாகும்.<br>❖ வல்லரசு நாடுகள் தங்கள் ஆற்றலைக் காண்பிக்கவே விண்வெளித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தின.<br>❖ இந்திய விண்வெளித்துறையின் தந்தை விண்வெளித் தொழில்நுட்பத்தை மக்களுக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்றே சிந்தித்தார்.<br>❖ நிலத்தில் எந்த இடத்தில் நீரின் அளவு எவ்வளவு இருக்கும் என்பதைச் செயற்கைக் கோள் மூலம் கண்டு கொள்ள முடியும்.<br>❖ கடலில் மீன்கள் அதிகம் கிடைக்கும் இடங்களைக் கண்டு மீனவர்களுக்குச் சொல்ல முடியும்.<br>❖ ஒவ்வோர் ஆண்டும் கிடைக்கும் விளைச்சலை அரசுக்குத் தெரிவித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க உறுதுணையாக இருக்கிறது. | 8 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ❖ திறன்பேசி, தானியங்கிப் பண இயந்திரம் போன்றவை இயங்க செயற்கைக் கோள்கள் பயன்படுகின்றன.<br>❖ மக்கள் பயன்படுத்தும் இணையச் செயல்கள் அனைத்திற்கும் செயற்கைக் கோள்கள் அவசியம் தேவை | |



| ஆக்கம் | |
|---|---|
| இராஜ.வேல்முருகன்<br>நேரு மேல்நிலைப்பள்ளி, எறையூர்<br>வேப்பந்தட்டை வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621133 | பெ. ஜெயராமன்<br>அரசு மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம்,<br>பெரம்பலூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621101. |



Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com